| O.S.No.182/2019 | PW2 : திரு. ரவி த/பெ. திரு. அப்பாச்சி | 17-02-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வழக்கில் சம்மனின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறீர்களா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிப்பதற்கு வாதி செல்வராஜ் அழைத்து வந்தார். கோர்ட்டில் பிரதிவாதி தரப்பில் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றும், அதனால் சாட்சியம் அளிக்க சொல்லி அழைத்தார். நான் இது சம்மந்தமாக செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன்.

2. நான் 1996–ம் ஆண்டு காலை 11.30 மணிக்கு ரிஜிட்டார் ஆபிஸ் வந்ததாக சொல்லியுள்ளேன். எந்த பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வந்தேன் என்றால் மார்க்கெட் பக்கத்தில் உள்ள அலுவலகத்திற்கு வந்தேன். வாதி செல்வராஜை கடந்த 2½ ஆண்டுகளாக தெரியும். வாதியை எந்த வகையில் தெரியும் என்றால் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்ட வகையில் தெரியும். பத்திரப்பதிவு அலுவலகத்தில் அன்றைய தினம் நிறைய பேர் இருந்தார்கள்.

3. வா.சா.ஆ.4–ல் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நாளில்தான் உயில் எழுதினார்கள். வா.சா.ஆ.4–ல் யார் எழுதினார்கள் என்றால் பார்த்திபன் மகள் கிருஷ்ணகுமாரி என்பவர் எழுதினார். உயிலை எழுதியவரை எனக்கு நன்றாக தெரியும். பார்த்திபனை எனக்கு சின்ன வயதிலிருந்து தெரியும். நான் செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்திபன் எந்த ஆவணம் எழுதினாலும், அதில் நான் சாட்சி கையெழுத்து போடுவேன் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை.

4. செய்யாறு முன்சீப் நீதிமன்றத்தில் அவ்வாறு சொல்லிவிட்டு இந்த நீதிமன்றத்தில் மாற்றி சொல்வதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அன்று என்று சொன்னால் சரியல்ல. நான் காலை 11½ மணி முதல் 1½ மணி வரை ரிஜிட்டார் ஆபிசில் இருந்தேன். அந்த நேரத்தில் உயிலினை தயார் செய்தார்கள். எழுதிய உயிலை எப்போது பதிவு செய்தார்கள் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கு படிக்க தெரியாது, 2-ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

5. முதன்மை சாட்சிய வாக்குமூலத்தினை படித்து பார்த்தீர்களா என்றால் எனக்கு படித்து சொன்னார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் உயில் சாசனத்தை எழுதும்போது அக்கப்பநாயுடுவுக்கு 70 அல்லது 75 வயது இருக்கும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வயது குறித்து நான் சொல்லியுள்ள விஷயம் சரியானதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் அன்றைய தினமே எனது உயில் பதிவு செய்யப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. உயில் பதிவு செய்யப்பட்ட விவரம் எப்படி தெரியும் என்றால் 4 நாட்கள் கழித்து அங்கப்ப நாயுடுவை பார்த்தேன், அவர்தான் சொன்னார். அங்கப்பநாயுடுவை பார்த்த விஷயத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்திரம் பதிவு செய்த விஷயத்தை பத்திர எழுத்தர் சொல்லி தெரியும் என்று சொல்லிருந்தால் நான் அவ்வாறு சொல்லவில்லை. செய்யாறு முன்சீப் நீதிமன்றத்தில் நானும், எனது அண்ணனும் சென்றதாக சொன்னேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட பச்சையப்பன் என்பவரை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்ததில்லை, அவர் கையெழுத்து போடும்போது நான் படித்து பார்த்தேன். பச்சையப்பன் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருக்கிறது, வந்து சாட்சி கையெழுத்து போடு என்று சொன்னார்கள், அதனால் நான் போட்டேன். வா.சா.ஆ.4 எழுதும்போது வாதி இருந்தாரா என்றால் இல்லை.

8. நான் செய்யாறு உரிமையியல் நீதிமன்றத்தில் வாதியும், பிரதிவாதியும் இருந்தார் என சொல்லிவிட்டு தற்போது வாதி இல்லை என்று முன்னுக்குபின் முரணமாக சொல்வதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்றால் சரியல்ல. உயில் எழுதிய அக்கப்ப நாயுடுவை எனக்கு என் தந்தை மூலமாக தெரியும். என் தந்தை விவசாயம் செய்து வந்தார்.

9. அக்கப்பநாயுடுவை என் தந்தைக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்று எனக்கு சரியாக தெரியாது. அக்கப்பநாயுடுவுக்கும் எனது தந்தைக்கும் எந்தவொரு பரிட்சியமும் இல்லை என்று சொன்னாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அக்கப்பநாயுடு எப்போது காலமானார் என்று எனக்கு தெரியாது. அக்கப்பநாயுடுவை நான் பார்த்ததாக சொல்வது பொய் என்றாலும், அவர் வயது முதிர்வு காரணமாக நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக கிடந்தார் என்றாலும் சரியல்ல. நான் 70, 75 வயது மதிக்கத்தக்கக கிருஷ்ணப்ப நாயுடு குமாரர் ராஜகண்ணுவைத்தான் பார்த்தேன் என்றாலும் சரியல்ல. பத்திரம் எழுதிய பிறகு அதற்கு பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் பத்திரம் எழுதுவதற்கு அடிக்ககடி வருவேன் என்றால் இல்லை, வேலை ஏதேனும் இருந்தால் வருவேன்.

10. நான் கையிருப்பு சாட்சி என்றாலும், அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு நேரடியாக எந்த சங்கதியும் தெரியாது என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்காக வா.சா.ஆ.4ல் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4ல் உள்ள கையெழுத்து அக்கப்பநாயுடுவின் கையெழுத்து இல்லை என்றாலும், வேறொருவரின் கையெழுத்து என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**